**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | **: CC.39/2020 (Split up from CC.21/2017)** |
| **Miscellaneous** | **:** |
| **Summary Trial** | **:** |
| **Maintenance** | **:** |
| **Deposition of witness** | |
| **for prosecution** | **: PW.10 . ராமலட்சுமி** |
| **Fathers Name/Husband Name** | : **சீனிராஜ்** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.04.2022

**மு.வி**: நான் தற்போது தேனி மாவட்டம் போடி நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 02.09.2014 அன்று உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்றையதினம் சார்பு ஆய்வாளர் திரு.மணிமொழி அவர்களால் பதிவு செய்து கொடுக்கப்பட்ட உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.33-2014 பிரிவுகள் 498(எ), 417, 420 இதச மற்றும் 4 வரதட்சனை தடைச்சட்டம் படி வழக்கு செய்துள்ளார். அன்றையதினமே இவ்வழக்கை என்னுடைய மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் அனிதா, தேனம்மாள், மகேஸ்குமார் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்கு மூலம் பதிவு செய்தேன். அதன்மேல் 20.09.2014 அன்று சாட்சிகள் மாலதி, விஜய், சோனை ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்மேல் 23.07.2015 அன்று சாட்சி அனிதா என்பவருக்கு மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். மறுவாக்குமூலம் பதிவு செய்யும் போது 1வது எதிரி செந்தில்குமாருக்கும் வாதிக்கும் திருணம் நடந்த போது எடுத்த திருமண புகைப்படம் **அசாஆ.3** 1வது எதிரி செந்தில்குமாருக்கும் வாதிக்கும் நடந்த திருமணத்திற்கான திருமண பத்திரிக்கை **அசா.ஆ.4** 1வது எதிரிக்கும் புகார்தாரருக்கும் பிறந்த குழந்தை நிசாந்த்சத்தியம்-த்தின் பிறப்பு சான்றிதழின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) **அசாஆ.5** 1வது எதிரி செந்தில்குமாருக்கும் சாட்சி ஆஷாலிடியா என்பவருக்கும் திருமணத்தின் இந்து கிறிஸ்தவ திருமண சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்டதற்கான நீதிமன்ற சான்றிட்ட நகல் **அசாஆ.6** மேலும் 1வது எதிரி செந்தில்குமாருக்கும் சாட்சி ஆஷாலிடியா என்பவருக்கும் நடந்த திருமண வரவேற்பில்

எடுக்கப்பட்ட புகைப்படத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் **அசா.ஆ.7** (2,3,4 எதிரிகளின் தரப்பில் மேற்படி ஆவணத்தை ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது) 1வது எதிரி செந்தில்குமாருக்கும் சாட்சி ஆஷாலிடியா என்பவருக்கும் பிறந்த குழந்தை ஜெனுசுகிர்தா என்பவரின் பிறப்பு சான்றிதழின் நீதிமன்ற சான்றிட்ட நகல் **அசா.ஆ.8** (2,3,4 எதிரிகளின் தரப்பில் மேற்படி ஆவணத்தை ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது) 1வது எதிரிக்கும் சாட்சி ஆஷாலிடியாவிற்கும் கோயம்புத்துார் நீதிமன்றத்தில் DOP 300/14 வழக்கில் மனுவின் கோயம்புத்துார் குடும்ப நல நீதிமன்றத்தின் சான்றிட்ட நகல் **அசாஆ.9** (2,3,4 எதிரிகளின் தரப்பில் மேற்படி ஆவணத்தை ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது) 1வது எதிரி செந்தில்குமாரின் ஓட்டுநர் உரிமத்தின் கோயம்புத்துார் குடும்ப நல நீதிமன்றத்தின் சான்றிட்ட நகல் **அசாஆ.10** சாட்சி ஆஷாலிடியாவின் ஆதார் அட்டை கோயம்புத்துார் குடும்ப நல நீதிமன்றத்தின் சான்றிட்ட நகல் **அசா.ஆ.11** ஆஷாலிடியாவின் கர்நாடகா வங்கியில் வைத்திருந்த கணக்கிற்கான பாஸ்புக்கின் முதல் பக்கத்தின் கோயம்புத்துார் குடும்ப நல நீதிமன்றத்தின் சான்றிட்ட நகல் **அசாஆ.12** மேலும் சாட்சிகள் ஆசாலிடியா, பாண்டியம்மாள், சார்பு ஆய்வாளர் மணிமொழி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சட்டப்பிரிவு 498(எ) 417 420 இதச மற்றும் 4 வரதட்சனை தடுப்பு பிரிவுகளை மாறுதல் செய்து 494 498(எ) 417 420 342 இதச உ/இ 4 வரதட்சனை தடுப்பு பிரிவுகளாக மாறுதல் செய்து எனது புலன்விசாரணையை முடித்து அன்றையதினமே குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**கு.வி**: இந்த வழக்கின் விசாரணை அதிகாரி என்ற முறையில் முதல் தகவல் அறிக்கையின் சங்கதிகளை அறிந்து கொள்ள கடமைபட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் காலம் 5ல் சம்பவயிடமானது பிஎம்டி நகர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் யார் வீடு என குறிப்பிடவில்லை என்று சொன்னால் பிஎம்டி நகர் உசிலம்பட்டி என்று தான் உள்ளது. உங்களுடைய உயர்அதிகாரியிடம் இருந்து வரும் தபால்கள் அனைத்தும் ஆவண எண் குறிப்பிட்டு தான் வரும் என்று சொன்னால் சரியல்ல சில நேரம் அப்படியே தபாலை அனுப்பி வைத்துவிடுவார்கள். சம்பவம் நடந்த இடம் சென்னை என்று சொன்னால் சரியல்ல சென்னை மற்றும் உசிலம்பட்டியில் நடந்துள்ளது. சென்னையில் சென்று நீங்கள் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சென்னைக்கு சென்று நீங்கள் விசாரணை செய்வதற்கு பாரின்பாஸ்போர்டு வேண்டும் என்று சொன்னால் தேவையில்லை, உயர் அதிகாரிகளிடம் தகவல் சொல்லிவிட்டு சென்றாலே போதும், வேறு மாநிலத்திற்கு சென்றால் தான் பாரின்பாஸ்போர்டு தேவை. சென்னைக்கு சென்று விசாரணை செய்ததற்கான சாட்சிகளின் வாக்குமூலங்கள் எதுவும் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் வாங்கவில்லை. சென்னை சென்று விசாரணை செய்யவில்லை என்றும் அதனால் தான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அசா.1 திருமணத்தின் போது 20 பவுன் எந்த வகையான நகை போட்டு சென்றார் என்று குறிப்பிட்டு விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அசா.4, அசா.5, அசா.7 ஆகியோர் அவர்களது வீட்டில் எதிரிகள் நகை வாங்க சொல்லி தகராறு செய்ததாக உங்களது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்களா என்றால் தகராறு என்று வார்த்தை குறிப்பிட்டு சொல்லவில்லை ஆனால் அவர்களிடம் வாதம் செய்ததாக வாக்குமூலம் அளித்தார்கள். புகார்தாரரும் 1வது எதிரி செந்தில்குமாரும் சென்னையில் தனிக்குடித்தனம் நடந்தி வந்தார்கள் என்று உங்கள் விசாரணையில்

தெரிந்து கொண்டீர்களா என்று சொன்னால் தெரிந்து கொள்ளவில்லை. அசா.1ன் பெற்றோர் வீட்டில் 2 முதல் 5 எதிரிகள் எந்த தேதியில் தகராறு செய்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை ஆனால் ஒரு மாதம் கழித்து தகராறு செய்ததாக சொல்லப்பட்டுள்ளது. அசா.1 சென்னையில் எந்த தேதியில் தாக்கப்பட்டார் என்றும் மேலும் அடைத்து வைக்கப்பட்டார் என்றும் குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்று சொன்னால் திருமணத்திற்கு பின்னர் 6 மாதம் கழித்து அடைத்துவைக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் ஆனால் தேதி குறிப்பிடவில்லை. சென்னையில் நடந்த சம்பவத்திற்கு தனிநபர் சாட்சிகளை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தீர்களா என்று சொன்னால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அசா.1 அனிதா தாக்கப்பட்டதற்கு ஏதாவது மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டதாக உங்கள் விசாரணையில் தெரிந்து கொண்டீர்களா என்று சொன்னால் தெரிந்து கொள்ளவில்லை. வழக்கில் சொல்லப்பட்டுள்ளது போல் அசா.1 அனிதா 2 முதல் 5 எதிரிகளால் தாக்கப்படவில்லை என்றும் அதனால் தான் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட காலத்தில் அசா.1ன் கணவர் 1வது எதிரி செந்தில்குமார் மதுரை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வந்தததை தெரிந்து கொண்டீர்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசா.3 மகேஷ்குமார் உங்களிடம் அவருடைய மகளை 2 முதல் 5 எதிரிகள் அடித்து துன்புறுத்தியதாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். அசா.5 சோனை உங்களிடம் அளித்த வாக்குமூலத்தில் என் வீட்டிற்கு வந்த அனிதாவை பார்த்து நகை கேட்டு மிரட்டியதாக சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான் அது தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 4வது எதிரி சரண்யாகுமாரி அசா.1ன் திருமணத்திற்கு முன்பே திருமணம் முடித்து சென்னை முகப்பேரில் நக்கீரன் சாலையில் குடியிருந்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல நான் விசாரிக்கும்பேர்து கூட்டுக்குடும்பமாக இருந்ததாக தெரிந்து கொண்டேன். அசா.8 ஆஷாலிடியாவை நீங்கள் நேரடியாக விசாரித்து வாக்கு மூலம் அவரிடம் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2,3 எதிரிகளின் சென்னை வீட்டில் வைத்து அசா.1க்கு வளைகாப்பு நடத்தப்பட்டு சந்தோஷமாக உசிலம்பட்டிக்கு அசா.1 அழைத்து வரப்பட்டார் என்று உங்கள் விசாரணையில் தெரிந்து கொண்டீர்களா என்று சொன்னால் தெரிந்து கொள்ளவில்லை. அசா.1க்கு என்ன விதமான சீர்வரிசை பொருட்கள் கொடுத்தார்கள் என்று உங்கள் விசாரணையில் தெரிந்து கொண்டீர்களா என்றால் சீர்வரிசை பொருட்கள் கொடுப்பதாக பேசிக்கொண்டார்கள் என்று மட்டும் தான் தெரிந்து கொண்டேன். 1வது எதிரி செந்தில்குமாருக்கு முதல் திருமணம் எங்கு வைத்து நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் சாட்சி ஆஷாலிடியா வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. 1வது எதிரி செந்தில்குமாருக்கு முதல் திருமணத்தில் யார்யாரெல்லாம் கலந்து கொண்டார்கள் என்று உங்கள் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்று சொன்னால் முதலில் ஆஷாலிடியாவும் 1வது எதிரிக்கும் பதிவு திருமணம் நடந்துள்ளது. அசாஆ,6 பதிவு திருமண சான்றிதழில் சாட்சிகளாக குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை நேரடியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பதிவு திருமண சான்றிதழ் தவறான ஆவணம் என்பதால் தான் நீங்கள் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரி செந்தில்குமாருக்கும் ஆஷாலிடியாவிற்கும் முதல் திருமணம் மூலம் குழந்தை பிறந்ததாக நீங்கள் தாக்கல் செய்த

அசா.ஆ.8 பொய்யான ஆவணம் என்பதால் தான் நீங்கள் மரபணு பரிசோதனைக்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல உண்மையான ஆவணம் என்பதால் மரபணு பரிசோதனை தேவையில்லை. 5வது எதிரி புஷ்பம் வீட்டில் வைத்து அசா.1 அனிதாவின் நகைகளை ஆசாரி மூலம் எடை பார்க்கப்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றும் ஆனால் அந்த ஆசாரியின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அசா.1க்கு திருமணம் எந்த தேதியில் நிச்சயம் செய்யப்பட்டது என்று குறிப்பிட்டு உங்களது விசாரணையில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அசா.1க்கு நீங்கள் விசாரணையில் குறிப்பிட்டுள்ளது போல் சொன்ன இடத்தில் நிச்சயதார்தம் நடைபெறவில்லை என்றும் அதில் சாட்சிகள் கலந்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல, நிச்சயதார்த்தத்தில் கலந்த சாட்சிகளை சாட்சிபட்டியலில் சேர்த்துள்ளேன். என்ன காரணத்திற்காக அசா.1ன் திருமண நிச்சயம் அவரது வீட்டில் நடக்காமல் வேறு ஒருவருடைய நடைபெற்றது என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல அசா.1ன் வீடு சிறியதாக உள்ளதால் தாய்மாமா வீட்டில் நடைபெற்றது. சாட்சி அனிதாவின் மறுவாக்குமூலத்தில் செந்தில்குமாரை திருமணம் செய்து கொண்டதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அசா.ஆ.3 முதல் அசா.ஆ.12 வரையிலான ஆவணங்களை யாரிடம் இருந்து பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று உங்கள் இறுதி அறிக்கையில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லவில்லை ஆனால் அசா.1ன் மறுவாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளேன். அசா.8 ஆஷாலிடியா அவர் உங்களிடம் அளித்த வாக்கு மூலத்தில் அவருக்கும் சென்னை சூலைமேடு சவுராஸ்டிரா நகரில் வசித்து வரும் மாயாண்டி மகன் செந்தில்குமாருக்கும் 28.01.2009ம் தேதி நடந்ததாக சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். சென்னை சூலைமேடு சவுராஸ்டிரா நகர் என்பது பரந்த பகுதி என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அசா.8 வாக்குமூலத்தில் செந்தில்குமாரின் முகவரியை குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்று சொன்னால் கதவு எண் குறிப்பிட்டு கூறவில்லை ஆனால் சூலைமேடு சவுராஸ்டிரா நகர் என குறிப்பிட்டுள்ளார். அசா.8 உங்கள் விசாரணையில் சொல்லியுள்ள மாயாண்டி மகன் செந்தில்குமார் வேறு என்றும் 1வது எதிரி செந்தில்குமார் வேறு நபர் என்று சொன்னால் சரியல்ல. 2வது எதிரி மாயாண்டி ஓய்வு பெற்ற சார்பு ஆய்வாளர் என்று சொன்னால் சரிதான். 2வது எதிரி மாயாண்டி அவர் உங்கள் கீழ்நிலை பணிபுரியும் சார்பு ஆய்வாளர் என்பதால் அவர் மீது தவறான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதால் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரி சென்னையில் உதயம் டிவியில் எடிட்டராக பணிபுரிந்து வருவதாக முதல் தகவல் அறிக்கையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி உதயம் டிவி நிறுவனத்தை சேர்ந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றீர்களா என்று சொன்னால் பெறவில்லை. உண்மையிலேயே உதயம் டிவியில் வேலை பார்த்திருந்தால் நீங்கள் அதை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருப்பீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரி செந்தில்குமார் விவகாரத்து வழக்கு தாக்கல் செய்திருப்பதால் தான் அசா.1 2 முதல் 5 எதிரிகள் மீது பொய்யாக இந்த புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அசா.1ம் அவரது பெற்றோரும் உசிலம்பட்டியில் ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். வழக்கை மிகைப்படுத்தி கூறுவதற்காக அசா.1 வேறு ஒரு முகவரியை கூறியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல சம்பவ நேரத்தில் வள்ளுவன் காம்ளக்சில் குடியிருந்தார். அசா.1ம் அவரது பெற்றோரும் என்ன காரணத்திற்காக தனிதனியாக குடியிருந்து

வருகிறார்கள் என்று உங்கள் விசாரணையில் தெரிந்து கொண்டீர்களா என்றால் நான் விசாரிக்கும்போது ஒரே இடத்தில் ஒரே வீட்டில் இருந்தார்கள். சாட்சி பட்டியலில் அசா.1 ஒரு முகவரியிலும் அசா.2 மற்றும் அசா.3 வேறு ஒரு முகவரியிலும் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நீங்கள் சொன்னது போல் 5வது எதிரி புஸ்பம் வீட்டில் வைத்து அசா.1ன் நகைகளை எடை போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. சென்னையில் வைத்து 2 முதல் 5 எதிரிகள் எந்தவொரு வரதட்சனை நிபந்தனையை அசா.1டம் செய்யவில்லை என்றும் அசா.1ஐ வீட்டில் அடைத்து வைத்ததாக மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சென்னை சென்று விசாரிக்காமலும் வழக்கு ஆவணங்களை முறைப்படி வழக்கில் சொல்லியுள்ளது போல் வாங்கவில்லை என்றும் வழக்கிற்காக தவறாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும் சொன்னால் சரியல்ல. 2 முதல் 5 எதிரிகள் அசா.1ன் பெற்றோர் வீட்டில் வைத்து தகராறு செய்யவில்லை என்றும் அதனால் தான் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல, பார்வை மகசர் இந்த வழக்கிற்கு தேவையில்லை. சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

ம.வி:இல்லை.

S.d./ Ramalakshmi
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. R.M.Marimuthu
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.